# 2 நாளில் மெட்ரோ ரயிலில் 63 ஆயிரம் பேர் பயணம்



விமான நிலையம் – விம்கோ நகர் மெட்ரோ ரயிலில், நேற்று கூட்டம் அதிகம் இருந்தது.

**சென்னை, ஜூன் 24–**

மெட்ரோ ரயிலில் இரு நாட்களில், 63 ஆயிரம் பேர் பயணம் செய்துள்ளனர்.

சென்னை விமான நிலையம் – விம்கோ நகர், பரங்கிமலை – சென்னை எம்.ஜி.ஆர்., சென்ட்ரல் ரயில் நிலையம் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்பட்டு, கொரோனா ஊரடங்கால் ரத்து செய்யப்பட்டிருந்தது.

இந்த ரயில் போக்குவரத்து, 21ம் தேதியில் இருந்து, மீண்டும் தொடங்கியது. ரயிலில், 50 சதவீதம் பேர் மட்டும் பயணிக்க அனுமதிக்கப்படுகிறது. மெட்ரோ ரயிலில், 21 மற்றும் 22ம் தேதிகளில், மொத்தம், 63 ஆயிரத்து, 215 பேர் பயணம் செய்துள்ளனர். முந்தைய இரு தினங்களை விட, நேற்று பயணியர் கூட்டம் அதிகமாக இருந்தது.

விமான நிலையம் – விம்கோ நகர் மெட்ரோ ரயிலில், சைதாப்பேட்டை – சென்ட்ரல் இடையே, பல ரயில்களில், 50 சதவீதம் பயணியர் பயணம் செய்தனர். முக கவசம் அணியாத மூன்று பயணியருக்கு, தலா, 200 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.